**ORIGINAL ARTICLE**

# 21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் நாவல்களைத் தழுவி உருவாக்கப்படும் திரைப்படங்கள் ஓர் ஆய்வு.

**[21-AM KATRAL KARPPITTALIL NAAVALKALAIT TALUVI URUVAAKKAPPADUM TIRAIPPADANGGAL OOR AAIVU]**

# 21-ST CENTURY STUDY ON ADAPTATION OF NOVELS IN FILMS

**இரா. கணேசன்*[1]/ R. Kanesan*[1]**
**சி. இளங்குமரன் [2] / S. Ilangkumaran [2]**
**த. ஜான்சிராணி [3] / T. Jansirani [3]**

[1] Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: kanesan_nesanka@yahoo.com
[2] Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: ilangkumaran@fbk.upsi.edu.my
[3] Deparment of Tamil Studies in Foreign Countries, Thanjavur Tamil University, India. Email: jancirani.poet@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/96

**Abstract**

21st-century education is generally used to refer certain core competencies such as collaboration, digital literacy, critical thinking, and problem-solving that advocates believe schools need to teach to help students thrive in today's world. However, the idea of what learning in the 21st century should look like is open to interpretation and controversy. The quality of human capital is an important component for the country. In this case, teachers have to produce multitalented generation by their teaching skill in classroom. This article is aimed at scrutinizing the transformation across genre, that is from novels to films. Seen from the perspective of literature, this effort could increase the reading motivation. The adaptation of literary into film have to be analyse to improve thinking skills among students. In relation to this, the objective of this article is to analyse the changes of written form novel into visual form of film. The result of this adaptation shows that how far literary values are adapted into visual forms. The students get more interested to read a novel and visualise it into his own imagination. They will get various interesting elements befitting the needs of today’s generation on their 21-st century studies.

**Keywords:** 21-st Century Learning, novel, film, adaptation.

**ஆய்வுச் சாரம்**

21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் சமன்சீர் கொண்ட மாணவர்களை உருவாக்குவது ஓர் ஆசிரியரின் கடப்பாடாகும். ஆகையால், மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டும் கற்றல் கற்பித்தலின் வழி அவர்களின் உடல், உள்ளம், அறிவாற்றல் மற்றும் ஆன்மீகம் ஆகிய கூறுகளை ஆசிரியர்கள் செம்மைப்படுத்துவது சிறப்பாகும். விரைவான தொழில்நுட்ப மாற்றங்களைக் கண்டு வரும் இவ்வுலகில், எதனையும் உயர்ந்தச் சிந்தனைப் படிநிலையில் சிந்திக்கும் ஆற்றல்மிக்க ஒருவராக மாணவர்கள் இருத்தல் வேண்டும். அவ்வகையில் தொழில்நுட்ப வளர்ச்சியினால் அனைத்தையும் இலகுவாகக் கற்கும் முறைக்கு மாணவர்கள் பழக்கப்படுத்தப்படுகின்றனர். ஆகையால் இக்கால மாணவர்களிடையே புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் குறைந்து காணப்படுவது இவ்வாய்வின் சிக்கலாகிறது. இச்சிக்கலைக் களைய, ஆய்வாளர் எழுத்து படிவத்தைக் காட்சி படிவமாக்கும் தழுவல் முறையைக் கற்பிக்கும் அவசியத்தையும் அதன் ஒற்றுமை வேற்றுமைகளையும் இவ்வாய்வில் ஆராய்கிறார். மாணவர்களின் சிந்தனைத் திறனை, படக்காட்சிகள் எவ்வாறு துலங்கச் செய்கிறது என்பது இவ்வாய்வின் நோக்கமாகும். எழுத்தின் படிவம் காட்சிகளாகத் தழுவப்படும் போது ஏற்படும் மாற்றங்கள் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை இயங்க ஊக்குவிக்கும். அதனை கற்றல் கற்பித்தலில் கிரகிக்கும் ஆற்றலும் மாணவர்களுக்கு வளரும். அவ்வகையில், நாவலுக்கும் படத்திற்கும் நடுவே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை மாணவர்கள் அலசி ஆராய்வர். எனவே மாணவர்களிடையே சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்த இவ்வகையான இலக்கியம் மற்றும் தொழில்நுட்ப தழுவல் முறை பயனாக அமையும் என்பது இவ்வாய்வின் கண்டுபிடிப்பாகும்.

**கருச்சொற்கள்:** 21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தல், நாவல், தழுவல், திரைப்படம்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 10th July 2020, revised 5th August 2020, accepted 24th August 2020

## முன்னுரை

செம்மொழியான தமிழ்மொழி உலகின் பல்வேறு நாடுகளில் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் தாய்மொழியாகவும், முதன் மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும், அந்நிய மொழியாகவும் மற்றும் பயிற்றுமொழியாகவும் கற்பிக்கப்படுகிறது. அவ்வகையில் கல்வியாளர்களால், இன்றைய 21-ஆம் நூற்றாண்டு தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பல அணுகுமுறைகள் கையாளப்படுகிறது. ஆகவே மாணவர்களின் உடல், உள்ளம், அறிவாற்றல் மற்றும் ஆன்மீகம் ஆகிய கூறுகளை பல வகையான, கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை

மேற்கொண்டு ஆசிரியர்கள் செம்மைப்படுத்துவது சிறப்பாகும். இத்தகைய முயற்சி, மாணவர்களுக்கு சமன்சீர் கொண்ட கற்றல் கற்பித்தலை வழங்கும் ஓர் ஆசிரியரின் கடப்பாடாகும்.

தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றியுள்ளன. ஒவ்வோர் இலக்கியமும், ஒவ்வொரு குறிக்கோளை நமக்கு எடுத்தியம்புகிறது. கல்வியின் வாயிலாகவே ஒரு மனிதரின் சிந்திக்கும் ஆற்றலை மேலோங்கச் செய்ய முடியும் (பழனிவேலு, ஞா. 2006)[1]. எனவே, இவ்விலக்கியங்களைக் கல்வியின் வாயிலாகப் புகட்டும் போதே மாணவர்களுக்கு இலக்கிய ஆர்வமும் சிந்திக்கும் ஆற்றலும் வளர்கிறது எனலாம். அதே வேளையில் விரைவான தொழில்நுட்ப மாற்றங்களைக் கண்டு வரும் இவ்வுலகில், எதனையும் உயர்ந்தச் சிந்தனைப் படிநிலையில் சிந்திக்கும் ஆற்றல்மிக்க ஒருவராக மாணவர்கள் இருத்தல் வேண்டும். அப்போதுதான் போட்டி நிறைந்த இவ்வுலகில் நம் மாணவர்கள் ஈடுகொடுக்க முடியும். எந்நோக்கில் பார்த்தாலும், எதனைக் கற்றாலும், சிந்தனையின் செயல்பாடின்றி கல்வி சீர்படாது; செம்மையுறாது (ரொஸ்லான் பாகி, 2013)[2].

21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் ஏட்டுக்கல்வியின் மூலம் மட்டுமல்லாமல் தொழில்நுட்ப துணையுடனும் கல்வி கற்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இன்றைய மின்னியல் யுகத்தில் மாணவர்களின் அடிப்படை மொழித்திறன்களுடன் சிந்தனைத் திறனை வளர்க்கும் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவது ஆசிரியர்களின் முதன்மை பணியாகிறது. அவ்வகையில் தொழில்நுட்ப வளர்ச்சியினால் அனைத்தையும் இலகுவாகக் கற்கும் முறைக்கு மாணவர்கள் பழக்கப்படுத்தப்படுகின்றனர். ஆகையால் இக்கால மாணவர்களிடையே புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் குறைந்து காணப்படுவது இவ்வாய்வின் சிக்கலாகிறது. இச்சிக்கலைளைக் களைய, ஆய்வாளர் எழுத்து படிவத்தை காட்சி படிவமாக்கும் தழுவல் முறையைக் கற்பிக்கும் அவசியத்தையும் அதன் ஒற்றுமை வேற்றுமைகளையும் இவ்வாய்வில் ஆராய்கிறார்.

ஒவ்வொரு மனிதன் முளை சிந்திக்கும் மொழியே காட்சிகள்தான் என கூறுப்படுகிறது (டோனி பூசன், 2006)[3]. மாணவர்களுக்கு எழுத்து வடிவில் காணப்படும் செய்திகள், சிறுகதைகள், நாவல்கள் மற்றும் வாய்வழி கதைகள் ஆகியவற்றை காட்சி வழி காண்பது கற்றல் கற்பித்தலில் அதிக ஈர்ப்பை ஏற்படுத்தும். அந்த அளவில் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சியால் மாணவர்களின் சிந்தனைத் திறனை, படக்காட்சிகள் எவ்வாறு துலங்கச் செய்கிறது என்பது இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். இதற்காக இலக்கிய எழுத்தின் வகையான நாவலும் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு படைப்பான திரைப்படமும் ஆராயப்படுகிறது. இலக்கியப் படைப்பான நாவலையும் காட்சிப் படைப்பானத் திரைப்படத்தையும் ஒப்பிட்டு ஆராய்வது இவ்வாய்வின் இரண்டாம் நோக்கமாகும்.

திரைப்படம் மக்களின் மன ஆர்வத்தின் அடிப்படையில் இயங்குவதால், இலக்கியத்தைவிட மிக வேகமாகப் புதிய பரிமாணங்களைப் பெறுகிறது (கோபாலகிருஷ்ணன், 2004)[4]. அவ்வகையில் நாவலைத் தழுவி உருவாக்கப்படும் பல திரைப்படங்களை நாம் இன்றும்

காண முடிகிறது. தொடக்கக் காலத்தில் நேரடியாக நாடகங்களையும் நாவல் அல்லது காவியம் ஆகியவற்றை நாடகமாவும் திரைப்படங்களாகவும் தயாரித்தனர். நாடகங்களின் வழியாகப் படைப்பாளர்கள், புராணம் மற்றும் இதிகாசங்களை, மக்களுக்குப் பொழுதுப்போக்கு அம்சம் கொண்ட கதையாக நடத்தி வந்தனர். அதனைப் பார்த்த இயக்குநர்கள் அக்கதையையே திரைப்படங்களாக உருவாக்கினர். சான்றாக பவளக்கொடி எனும் நாடகம், கே.சுப்ரமணியம் இயக்கத்தில் திரைப்படமாக 1932-இல் வெளிவந்தது. அடுத்து, மேனகா என்ற நாவலை முதலில் நாடகமாக்கி, அதன் பின் திரைப்படமாக எடுத்தனர். தொடர்ந்து, நாடகப்பாங்கு மிக்க முதல் தமிழ்க்காப்பியம் என்று குறிப்பிடப்படும் சிலப்பதிகாரம், ஆரம்பத்தில் தெருக்கூத்து மற்றும் நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் கோவலன், கண்ணகி, பூம்புகார் என்றெல்லாம் பல பெயரில் திரைப்படங்களாக வெளிவந்தன. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியின் கதையைத் தழுவி மந்திரிகுமாரி முதலில் நாடகமாகி, பின் திரைப்படமாக வெளிவந்தது. பாரதிதாசனின் எதிர்பாராத முத்தம் என்னும் காவியம் பொன்முடி என்ற பெயரில் 1950-இல் திரைப்படமாக்கப்பட்டது. நாடகக் கதைகள் குறைவாக இருந்ததாலும், பழைய புராண, இதிகாசக் கதைகள் அதிகம் இருந்ததாலும் புதிய முயற்சியாக, நல்ல கதையம்சம் கொண்ட நாவல்களைத் திரைப்படமாக்கும் காலம் உருவானது. ஆகவே, திரைப்படம் தனது தனித் தன்மையை நிலைநாட்ட நாடகத்தின் அடிப்படைத் தன்மையை மாற்றி கதைக் கருவிற்காக இலக்கியத்தை நாடியது எனலாம்.

உலகளாவிய அளவில் நிகழ்ந்து வந்த நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றை திரைப்படமாகத் தழுவும் முறை வளர்ந்தது. இதில் நாவல் என்பது பொருள், வடிவம், மற்றும் உத்தி ஆகியவற்றுக்குத் தக்கவாறு பல்வேறாகப் பகுக்கப்படுகின்றது எனலாம். நாவலைக், கடந்த காலச் சமூக வாழ்வைச் சித்தரிக்கும் வரலாற்று நாவல்கள், இக்காலச் சமூகப் பிரச்சனைகளைக் கண்முன் படம்பிடித்துக் காட்டும் சமூக நாவல்கள், எதிர்கால எந்திரச் சமூக வாழ்வைக் காட்டும் அறிவியல் நாவல்கள், நனவோடை நாவல்கள், குறியீட்டு நாவல்கள், துப்பறியும் நாவல்கள் என்றும் வகைப்படுத்துகின்றார்கள். அதனடிப்படையில் படைப்பாளர்கள் முதல் தேர்வாக, நாவலைத் தழுவி திரைப்படங்களை இயக்கத் தொடங்கினர்.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய திரைப்படம் புதிய கலை வடிவமாகத் திகழ்ந்தாலும், திரைப்படத்தில் காணப்படும் அடிப்படைத் தன்மைகள், பன்னெடுங்காலமாக இலக்கியத் துறையில் பயின்று வந்ததை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததாகும். ஆகையால், திரைப்படம் என்பது ஒரு பேசும் இலக்கியமாகும். இதனை, ரஷ்யநாட்டு இயக்குநர் அந்த்ரே தார்கோவ்ஸ்கி, ஓர் எழுத்தாளன் சொற்களால் தனது வாசகர்களைக் கவர முடியும் என்று அறிந்திருப்பது போல, திரைப்படம் படிமம் என்ற மூலப்பொருளால் வடிவமைக்கப்படுகிறது என்கிறார் (அ. காமராஜ், 2017)[5].

இலக்கியத்தில் காட்சிப்படுத்துதல் என்பது உவமம், உருவகம், படிமம் முதலியவை மூலமாகவும் நடைபெறுகின்றது (நாகஜோதி, 2018)[6]. ஓர் இலக்கியம் தரமான திரைப்படமாக

அமைய, அவ்விலக்கியத்தின் உட்பொருளைக் கிரகிக்கும் ஆற்றல் கொண்ட திரைப்படப் படைப்பாளாரும், நல்ல இரசனைக் கொண்ட பார்வையாளரும் தேவை. மாணவர்களின் பார்வையில் நாவலும் திரைப்படமும் பொதுவாக 'கதையைச் சொல்லும்' படைப்புகளாகும். நாவல் என்பது உரைநடை இலக்கிய வகையாகும், மாறாக திரைப்படம் என்பது காட்சிக் கலையாகும். இக்கலைகள் இரண்டும் இணையும் போது இயல்பாகவே தழுவல் எனும் வடிவம் ஏற்படுகிறது. 21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் இவ்வகை தழுவல் உக்தியை மாணவர்களுக்கு புகட்டுவது அவசியமாகிறது. மாணவர்களின் சிந்தனை ஆற்றலை வளர்க்கும் ஒரு கருவியாக இத்தழுவல் முறையை கல்வியாளர்கள் கையாள வேண்டும். ஆகவே, இத்தழுவலின் வழி, கதைப்பின்னல், கதைமாந்தர் படைப்பு, பின்னணி, உத்தி, மொழிநடை ஆகியவற்றில் ஒற்றுமை, வேற்றுமைகள் பின்வருமாறு ஆராயப்படுகிறது:

**ஒற்றுமைகள்**

1. நாவலை எழுத எவ்வகையான கட்டமைப்புகள் தேவைப்படுகின்றதோ, அவை அனைத்தும் திரைப்படக் கட்டமைப்புகளிலும் இடம் பெறுகிறது.
2. கதைக்கரு, கதையின் தன்மை, கட்டுக்கோப்பு, வெளிப்பாடு போன்ற அக அமைப்புகளையும் நாவலில் ஆராய்வதைப் போலவே திரைப்படத்திலும் ஆராயலாம்.
3. நாவலாசிரியர்களுக்கென்று சில மொழிநடைகள் நாவலில் அமைந்திருப்பதைப் போலவே, திரைப்படத்திலும் அதே மொழிநடை பெற்றுள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, நாவலாசிரியரே திரைப்படத்திற்கு கதை, திரைக்கதை மற்றும் வசனம் எழுதும் போது, நாவலிலிருக்கும் மொழிநடை திரைப்படத்திலும் பயன்படுத்தப்படுகிறது.
4. கதைக்களம் பெரும்பாலும் நாவலில் இடம் பெற்றுள்ள இடப்பின்னணியையே, திரைப்படத்தில் அமைத்து அக்கதைக்களத்தில் காட்சிகள் படமாக்கப்படுகிறது.
5. நாவலில் வாசித்துவிட்ட காட்சியாக இருந்தாலும், திரையில் அவற்றை மீண்டும் பார்க்கும்பொழுது சலிப்பு ஏற்படுவதில்லை. நாவலை வாசிக்கும் போது மனத்திரையில் கண்ட அதே நிகழ்ச்சிகளை திரைக் காட்சியின் மூலம் காண்பதில் உள்ள ஆர்வம்தான் அதன் காரணமாகும்.
6. நாவல் மற்றும் திரைப்படம் இரண்டையும் கலைப்படைப்பாக உருவாக்கும் அதே சமயத்தில் அதனை முக்கியத் தொழிலாகவும், வியாபாரமாகவும் செய்யும் படைப்பாளர்களும் உள்ளனர்.

**வேற்றுமைகள்**

1. நாவல் கட்டுப்பாடற்ற ஒரு எழுத்துக் கலை வடிவமாகும். இதை எழுத ஓரளவு மொழித்திறன் போதுமானது. ஆனால் திரைப்படத்தில் நிறைய கட்டுப்பாடுகள், வரன்முறைகள், மற்றும் கால வரையறைகளும் உண்டு.
2. நாவல், எழுத்தாளர் ஒருவரின் கற்பனையும் அதன் விளைவும் கலந்த ஒரு படைப்பாக காணப்படுகிறது. ஆனால் திரைப்படம் பல்வேறு தொழில்நுட்ப கலைஞர்களின் ஒத்துழைப்போடும், இயக்குநர், வசன ஆசிரியர் ஆகியோரின் கற்பனையும் ஆலோசனையும் கலந்த ஒரு படைப்பாக உருவாகின்றது.
3. நாவல், எழுத்துகளின் மூலம் கற்பனை உணர்வை நமக்கு எழச் செய்கிறது, ஆனால் திரைப்படம் கற்பனையை நேரடியாக பார்வையாளரகளுக்கு படக் காட்சி வழியாகக் காட்டுகிறது.
4. நாவலில் கதைப்பின்னலோடுப் பல பொருட்கள் கதையைப் படிக்கும்பொழுது கூறப்பட்டாலும் அதன் முக்கியத்துவம் நம் கவனத்தில் வருவதில்லை, ஆனால் திரைப்படத்தில் காட்டப்படும் ஒவ்வொரு பொருளும் ஏதோ ஒரு காரணத்தைக் அடிப்படையாகக் கொண்டுக் காட்டப்படுகின்றன என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.
5. நாவலில் நிகழ்ச்சிகளை எழுத்தாளர் தம் கற்பனையில் விரும்பியபடி விரித்து விளக்கலாம். ஆனால் திரைப்படத்தில் நிகழ்ச்சிகளை வெளிப்புறங்களில் நேரடியாகச் சென்று படமாக்கி காட்சிகளில் காட்டுகின்றனர்.
6. நாவலில் கதைமாந்தரின் இயல்புகளையும் பண்புகளையும் ஆசிரியர் விளக்கிச் சொல்வதன் மூலம் நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் திரைப்படத்தில் கதை மாந்தர்களின் மனநிலை, உணர்வு, பண்பு, ஆகியவை அவர்களின் முகபாவம், நடிப்பு, ஒப்பனை வழியாக நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது.

இன்றும் தமிழில் எண்ணற்ற நாவல்கள் எழுதப்பட்டு வருகின்றன. பல சிறந்த கருத்தையுடைய நாவல்கள் மாணவர்களின் மத்தியில் பேசப்படாமலேயே உள்ளது. நாவல்களைத் தழுவி திரைப்படங்கள் உருவாக்கப்படும் போது மாணவர்களிடையே வரவேற்பு அதிகரிக்கும். சான்றாக லாக்கப் நாவல் விசாரணை எனும் திரைப்படமாகத் தழுவி வெளியானப் பொழுது படத்தின் தாக்கத்தால் நாவலின் விற்பனை பன்மடங்காக அதிகரித்தது என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார் நாவலாசிரியர் மு.சந்திரக்குமார். வெக்கை நாவல் அசுரன் திரைப்படமாக வெளிவந்து கருத்து ரீதியிலும் வசூல் ரீதியிலும் வெற்றி பெரற்றதைக் காணலாம். தொடர்ந்து வெக்கை நாவலுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டு நாவல் பதினொன்றாம் பதிப்பாக மீண்டும் அச்சடிக்கப்பட்டு தற்பொழுது விற்பனையில் உள்ளது.

ஏற்கனவே வாசித்த ஒரு கதையைக் காட்சி வடிவமாகக் காணும் ஆர்வம் மாணவர்களிடையே ஏற்படுவது இயல்பு. ஆகையால், எழுத்தின் படிவம் காட்சிகளாகத் தழுவப்படும் போது ஏற்படும் மாற்றங்கள் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை இயங்க

ஊக்குவிக்கும். அதனை கற்றல் கற்பித்தலில் கிரகிக்கும் ஆற்றலும் மாணவர்களுக்கு வளரும். நாவலுக்கும் படத்திற்கும் நடுவே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை மாணவர்கள் சுயகமாக அலசி ஆராய முற்படுவர். எனவே, மாணவர்களிடையே சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்த இவ்வகையான இலக்கியம் மற்றும் தொழில்நுட்ப தழுவல், பயனாக அமையும் என்பது இவ்வாய்வின் கண்டுபிடிப்பாகும்.

**துணைநூற்பட்டியல்:**


1. Palanivelu, N. (2006). *Centamiḻ kaṟpikkum muṟaikaḷ [Methods of teaching Senthamizh]*. Tanjavur: Ayya Publication.
2. Roslan Baki. (2013). *Kepintaran Daya Cipta Kemahiran Berfikir (1)*. Kuala Lumpur:
3. Buzan, T. (2005). *The Untimate Book of Mind Maps*, London, England: Thorson. Utusan Publications & Distributors Sdn. Bhd.
4. Balakrishnan, K. (2004). *Ciṉimāviṉ ulakam [The world of cinema]*. Chennai: Meera Publication.
5. Kamaraj, A. (2017). *Miṉṉampalam.*Com. https://www.minnambalam.com/k/
6. Nagagothi, A., & Muniisvaran, K. (2018). Importance of illustration drawings in short stories. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2*(4), 295-301. Retrieved from https://mjsshonline.com/index.php/journal/article/view/75